O.S. No.355/2019
PW–2 திரு.முத்துமாரி, த/பெ.சின்னத்தம்பி
Date : 06.11.2024.

**<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை : –</u>**

நான் இந்த வழக்கில் 3 வது வாதி ஆவேன். என் தகப்பனார் பெயர் சின்னத்தம்பி ஆகும். எனக்கு 40 வயதாகிறது. எங்களுடைய முன்னோர்களின் இடத்தை தவறாக பத்திரம் பதிவு செய்துள்ளதை ரத்து செய்யக்கோரி பரிகாரம் கோரியுள்ளேன். எங்களின் முன்னோர்கள் காளியப்ப நாடார், காரைச்சாமி நாடார், நல்லவநாடார், நல்லதம்பி நாடார், மரியராஜ் நாடார், முத்தையா நாடார் ஆவார்கள், மீதி நபர்களின் பெயர்கள் எனக்கு ஞாபகமில்லை. ஆனால் தாவா வழக்கை நாங்கள் நான்கு நபர்கள் தாக்கல் செய்துள்ளோம். வெற்றிவேல், குமாரவேல், முத்துமாரி, இளையராஜா ஆகியோர்கள் சேர்ந்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம். இதில் 4 ம் வாதி இளையராஜா எனது சகோதரர் ஆவார். 1 மற்றும் 2 வாதிகள் அண்ணன் தம்பி ஆவார்கள். 1 ம் வாதி எனக்கு சித்தப்பா முறை ஆவார். தாவா வழக்கை எங்கள் சமூகத்திற்காக தாக்கல் செய்துள்ளேன். அந்த சமூகத்தின் பெயர் நாடார் நாகமலை புதுக்கோட்டை நாடார் பொதுவுக்காக ஆகும். மேற்படி சங்கம் பதிவு செய்யப்படவில்லை. பத்திரத்தில் கண்டுள்ள பொது சொத்திற்காக தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம். 1 ம் பிரதிவாதியின் சங்கமும் நாகமலை புதுக்கோட்டையில் இருக்கின்றது என்றால் சரிதான். 1 ம் பிரதிவாதியின் சங்கத்திற்கு 2 ம் பிரதிவாதி செயலாளராக இருக்கிறார் என்றால் எனக்கு தெரியாது. நான் மேற்சொன்ன 10 குடும்பத்தில் நான் மரியராஜ் குடும்ப வகையறாவை சார்ந்தவன். அவர் பெயர் மரியராஜ் ஆகும். மரியராஜின் மனைவி பெயர் பழனியம்மாள் ஆகும், அவர் எனது பாட்டி ஆவார். அவர்களுக்கு நான்கு ஆண் வாரிசுகள் மற்றும் ஒரு பெண் வாரிசு உள்ளனர். அவர்களின் பெயர்கள் சின்னதம்பி, மலைச்சாமி, முத்துமாரி, நாகராஜ் மற்றும் சாக்குலின்மேரி. இதில் நான் சின்னதம்பியின் வாரிசு ஆவேன். என் உடன் பிறந்தவர்கள் மூன்று பேர். அவர்களின் பெயர்கள் முத்துமாரி, ராஜேஷ் மற்றும் இளையராஜா ஆகும். மேற்படி

மரியராஜ் வாரிசுகளில் சின்னதம்பி மகன்களாகிய முத்துமாரி மற்றும் இளையராஜா ஆகிய நாங்கள் இருவரும் தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளோம், மற்றவர்கள் யாரையும் இந்த வழக்கில் குறிப்பிடவில்லை. எங்கள் குடும்பம் சம்பந்தப்பட்ட கொடிவழி ஜாபிதாவை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. எனது அப்பாவின் அப்பா மரியராஜ் நாடார் என்பவர் கிறித்தவர் ஆவார், எனது அப்பாவின் அம்மா பழனியம்மாள் இந்து நாடார் வகுப்பை சார்ந்தவர். நான் இந்து மதத்தை பின்பற்றுகிறேன். எனது பாட்டிக்கு எனது தாத்தா இரண்டாவது கணவர் என்றால் எனக்கு தெரியாது. மரியராஜ் நாடாரின் வாரிசு சான்றிதழை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. என் தகப்பனார் சின்னதம்பி நாடார் என்பவர் மரியராஜ் நாடாருக்கும் பழனியம்மாளுக்கும் பிறந்தவர் என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை. எனக்கு பிராதில் உள்ள விவரங்கள் தெரியும். பிராதில் கண்டுள்ள சொத்து விவரமும் வா.சா.ஆ.1ல் சொல்லியுள்ள சொத்து பத்திரம் பத்திர எண்.6/1955ல் சொல்லியுள்ள சொத்து விவரமும் வெவ்வேறானது என்றால் சரியல்ல. மேற்படி பத்திரத்தில் கண்டுள்ள சொத்திற்கும் பிராதில் குறிப்பிட்டுள்ள சொத்திற்கும் நான்குமால்கள் வேறுபட்டு காணப்படுகிறது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் தற்போது ஐந்து கடைகள், ஒரு அலுவலகம் மற்றும் ஒரு மாரியம்மன் கோவில் உள்ளது. நான் கொரியர் அலுவலக ஏஜென்சி நடத்தி வருகிறேன். என் தகப்பார் மேற்படி ஐந்து கடைகளில் ஒரு கடையில் கடை நடத்தி வருகிறார். மேற்படி விவரத்தை நான் பிராது மற்றும் நிருபண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை. மேற்படி கோவிலில் என் தகப்பனார் பூசாரியாகவும் இருந்துள்ளார். தற்போது அவர் 2019ம் வருடத்திலிருந்து பூசாரியாக இல்லை. என் தகப்பனார் பூசாரியாக பணியாற்றியதற்கு 1ம் பிரதிவாதி சங்கதிலிருந்து சம்பளம் பெற்றுள்ளார் என்றால் சரிதான், சம்பள பாக்கி ரூ.30,000/- உள்ளது. என் தகப்பனார் மேற்படி கடைக்கு 1ம் பிரதிவாதி சங்கத்திற்கு 2019ம் ஆண்டிற்கு பிறகு வாடகை செலுத்தி வருகிறார். அதற்கு முன்பும் 1ம் பிரதிவாதி சங்கத்திற்கு வாடகை செலுத்தியுள்ளார். இந்த வழக்கு

தாக்கல் செய்வதற்கு 10 குடும்பத்திலிருந்து தீர்மானம் நிறைவேற்றி தாக்கல் செய்யவில்லை. மேற்படி கடைகளை கட்டிய விவரம் எனக்கு தெரியாது. நான் 1984ம் ஆண்டில் பிறந்தேன். 1993ம் ஆண்டில் எனக்கு 10 வயது இருக்கும். இரண்டு சங்கங்கள் 1993 மற்றும் 1995ல் இணைந்தது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு 2ம் பிரதிவாதியை சிறு வயதிலிருந்தே சுமார் 30 ஆண்டுகளாக தெரியும். எங்கள் நாடார் சமூக மக்களுடன் தான் 2ம் பிரதிவாதி செயல்பட்டு வருகிறார் என்றால் சரிதான். 01.01.1955ம் தேதி வா.சா.ஆ.1ல் வாங்கிய சொத்திற்கு பெயர் மாற்றம் செய்யப்பட்ட பட்டா எதுவும் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை. இந்த வழக்கில் வா.சா.ஆ.3 பட்டா தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில் 1ம் வாதி வெற்றிவேல் மற்றும் 2ம் வாதி குமாரவேல் மட்டும் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 பட்டாவிலும் தாவா சொத்து சங்கத்திற்கு பொது என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் 1ம் பிரதிவாதி சங்கத்தில் 2017, 2018 மற்றும் 2019ம் வருடத்தில் செயற்குழு உறுப்பினராக இருந்தேன் என்றால் இல்லை. எனக்கு குருசாமி என்ற ஜெயக்கனி நாடாரை தெரியும். அவர் எப்போது இறந்தார் என்று எனக்கு தெரியாது. குருசாமி என்ற ஜெயக்கனி நாடார் பொதுவுக்காக என்ற சங்கத்தில் செயலாளராக இருந்தார். இந்த விவரத்தை நான் பிராதிலும் என்னுடைய நிருபண வாக்குமூலத்திலும் குறிப்பிடவில்லை. எனக்கு காளியப்ப நாடார் மகன் V.K.நடராஜன் என்பவரையும் ராமசாமி நாடார் மகன் பெரியகருப்பன் என்பவரையும் எனக்கு தெரியாது. அவர்கள் இருவரும் 2010ம் ஆண்டு சங்க சொத்தை தான செட்டில்மென்ட் செய்துள்ள விவரம் எனக்கு 2019ம் வருடத்தில் தெரியும். மேற்படி விவரம் RDO அலுவலகத்தில் நடந்த விசாரணையின் போது எனக்கு தெரியும். வா.சா.ஆ.3 பட்டாவை மாற்றக்கோரி 1ம் பிரதிவாதி RDO அலுவலகத்தில் மனு செய்த போது தான் எனக்கு தெரியும். அந்த விசாரணையில் எனக்கு விசாரணை சம்மன் வந்தது. அந்த சம்மனை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. நானும் 1ம் பிரதிவாதியும் தூரத்து

சொந்தத்தில் சித்தப்பா முறை ஆகும். 1ம் பிரதிவாதி எங்கள் சமூகத்தில் முக்கியமான நபர் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியிடம் நான் எந்த உதவியும் பெறவில்லை. மேற்படி RDO விசாரணைக்கு நான் 1ம் பிரதிவாதியுடன் தான் சென்றேன். அரசு நில ஆர்ஜிதத்தின் போது தாவா சொத்து எடுக்கப்பட்டு இழப்பீட்டு தொகை வைப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, தாவா சொத்து நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு கல் ஊன்றப்பட்டுள்ளது. அவ்வாறு நில ஆர்ஜிதம் செய்யப்பட்டால் அதற்கு கோடிக்கணக்கான ரூபாய் கிடைக்கும் என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்து நாகமலை புதுக்கோட்டையில் முக்கியமான பகுதியில் அமைந்துள்ளது. எனக்கு 1ம் பிரதிவாதி சங்கத்தில் பதவி கொடுக்கவில்லை என்ற கெட்ட எண்ணத்தில் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி இழப்பீட்டு தொகையில் நானும் மற்ற வாதிகளும் பங்கு பெற்றுக்கொள்வதற்காக இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை பாதுகாக்கக்கோரி இந்த வழக்கை தவிர வேறு எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை. மேற்படி பொதுவுக்காக என்ற சங்கம் தொடர்பான ஆவணங்கள் வா.சா.ஆ.1யை தவிர வேறு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 5 மற்றும் 6 பிரதிவாதிகள் எனக்கு நெருங்கிய உறவினர்கள் என்றால் இல்லை. எனக்கு அவர்களை ஊர்க்காரர்கள் என்ற முறையில் தெரியும். மேற்படி 5 மற்றும் 6 பிரதிவாதிகள் தாவா சொத்தை எங்களுக்கு சாதகமாக வைத்துக்கொள்ள சொல்லியுள்ள விவரம் எனக்கு தெரியாது. 1ம் வாதி மீது 5ம் பிரதிவாதி 2012ம் ஆண்டு குற்றவியல் வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியும், அந்த வழக்கு பொய் வழக்காகும். மேற்படி வழக்கானது கோவில் சம்பந்தப்பட்ட பிரச்சனைக்குரியதாகும். தாவா சொத்தில் உள்ள கடைகள் சம்பந்தப்பட்ட ஊராட்சி வரி ரசீது எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் தகப்பனார் என் பாட்டியின் முதல் கணவருக்கு பிறந்த மகன் என்றால் சரியல்ல. தாவா சொத்து முதலில் யாரிடமிருந்து கிரையம் பெறப்பட்டது என்ற விவரம்

எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி சங்கத்தைச் சேர்ந்தவர்கள் சிறப்பாக செயல்பட்டு தாவா சொத்தை பாதுகாத்து வருவதை தடுப்பதற்கு தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நாகமலை புதுக்கோட்டையில் இருக்கும் நாடார் மக்களுக்கு நல்ல முறையில் பணியாற்றி வருவதை பொறுக்க முடியாமல் கெட்ட எண்ணத்தில் தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –** இல்லை.